இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2003 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

(2003, பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசின் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2003, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 21.25 தபாற் செலவு : ரூபா 6.75

2003 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ—ஒ. 89/2002

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 2003 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுப்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தில்,

(அ) அக்காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், "ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்கென இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் துணைவகை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்கென இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் துணிவகை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அக்காப்பு வாசகத்தின் (உ) என்னும் பந்தியில் "ஏதேனும் கப்பல்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "2002 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் கப்பல்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுப்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தில் —

(அ) அக்காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியின் (ii) உட்பந்தியில், "(6) ஆம் உட்பிரிவிற்" என்னும் எண்ணுக்கும் சொல்லுக்கும் பதிலாக, "(7)ஆம் உட்பிரிவிற்" என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அக்காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், "இது அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அல்லது" என்பது தொடங்கி "உத்தரவாதமொன்றைக் கொடுத்துதவுவதற்கு அமைந்ததாக" என்பது வரையான எல்லாச் சொற்களையும் நீக்கிவிடுவதன் மூலமும் அதன் இறுதியில் பின்வருவதனை இடுவதன் மூலமும் : —

"(இ) இரண்டாயிரத்து மூன்று சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் கப்பல், அத்தகைய இறக்குமதித் திகதியிலிருந்து முப்பத்தாறு மாதங்கள் வரையான ஒரு காலப்பகுதிக்கு வரிக்கொடுப்பனவைப் பின்போடலாம், அத்துடன் அத்தகைய பிற்போடப்பட்ட பணத்தொகை, முப்பத்தாறு மாதங்கள் கொண்ட அத்தகைய காலப்பகுதி முடிவடையுமுன்னர் காலாண்டுத் தவணைப் பணங்களில் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

வரிக்கொடுப்பனவைப் பின்போடுதல், இறக்குமதி செய்யப்பட்ட, பெறப்பட்ட அல்லது கொள்வனை செய்யப்பட்ட பண்டங்கள் மீது வருமதியாகவுள்ள வரித்தொகையை மேவும் வங்கி உத்தரவாதமொன்றை அல்லது கூட்டிணைப்பு உத்தரவாதமொன்றைக் கொடுத்துதவுவதற்கு அமைந்ததாதல் வேண்டும். பந்தி (ஆ) என்பதன் கீழான அத்தகைய பிற்போடுகையின் விடயத்தில், இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக மீள ஏற்றுமதி செய்யப்படுவதற்கென அரசாங்க நிறுவனம் ஒன்றினால் அத்தகைய பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டவிடத்து, உத்தரவாதம் எதுவும் தேவைப்படமாட்டாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "77 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "80 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "77 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "80 ஆம் பிரிவின் (2) ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவுக்கான (2) ஆம் உட்பிரிவில், "2002 ஓகத்து 1 ஆந் திகதிக்கு முன்னர் 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் செல்லுபடியுள்ள வரிப்பணப் பட்டியல்;" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள்ளாக வழங்கப்படாததும் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகாததுமான ஏதேனும் வரிப்பணப் பட்டியல் செல்லுபடியுள்ள வரிப்பணப் பட்டியல் ஆகாது. 2002 ஓகத்து 1 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அதன் பின்னர் 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் செல்லுபடியுள்ள வரிப்பணப் பட்டியல்" என்னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "வரிப்பணப் பட்டியலாகக் கொள்ளப்படவேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் கீழான வரிப்பணப் பட்டியலாகக் கொள்ளப்படவேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், ஏதேனும் அரசாங்க நிறுவனம், மாகாணசபை, உள்ளூராட்சி நிறுவனம் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய நிறுவனத்துக்கு, சபைக்கு அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் வரிவிதிக்கப்பட்டாலதான வழங்கலுக்காக அத்தகைய நிறுவனத்துக்கு, சபைக்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்கு அத்தகைய வரி விதிக்கப்பட்டாலதான வழங்கலைச் செய்கின்ற பதிவுசெய்யப்பட்ட அத்தகைய ஆளினால் வரிப்பணப் பட்டியலொன்று வழங்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவில் "ஒன்பதாம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாம் உட்பிரிவின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "தைத்த ஆடைகளின் உற்பத்தியாளரினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தைத்த ஆடைகளின், உற்பத்தியாளரினால் அல்லது சுங்கத் திணைக்களத்தின் மேற்பார்வையின்கீழ் ஏற்றுமதிக்காக தைத்த ஆடைகளை உற்பத்தி செய்கின்ற வேறு எவரேனும் தைத்த ஆடை உற்பத்தியாளரினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலம் ;

ஆயின் மேலும் அத்தகைய ஆடைகளில் விற்பனையின்மீது முற்போந்த காப்புவாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட தொகை செலுத்தப்பட்டுள்ளவிடத்து, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தீர்வை உட்பட வேறு வரி அல்லது விதிப்பனவு எதுவும் அத்தகைய விற்பனையின்மீது அறவிடப்படுதலாகாது ;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவுக்கான முதலாம் காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் "ஆறாம் உட்பிரிவில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏழாம் உட்பிரிவில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில், "மீளளிக்கப்படுதலாகாது." என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "மீளளிக்கப்படலாகாது. ஆனால் 1996 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள்வரிச் சட்டத்தின் கீழ், 2002 யூலை 31 ஆந் திகதியன்றுள்ளவாறான ஏதேனும் மேன்மிகையான உள்ளீட்டு வரி உட்பட, அத்தகைய உள்ளீட்டு வரி முன் காவப்படுதல் வேண்டும்." என்னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் (iv) ஆம் பந்திகளை நீக்கஞ் செய்வதன் மூலமும் அவற்றிக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் : –

"(iii) பெறப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கல் –

(அ) செல்லுபடியுள்ள வரிப்பணப் பட்டியல் ஒன்றின் மூலம் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சுங்கப் பண்டங்கள் வெளிப்படுத்துகை ஒன்

றின் மூலம் அல்லது வேறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணத்தின் மூலம்

ஆதாரப்படுத்தப்படாமலும் விடயத்துக்கேற்றாற்போல, அத்தகைய வரிப்பணப் பட்டியல் வரியிடத்தகு எந்தக் காலப்பகுதி தொடர்பில் வழங்கப்பட்டதோ இயைபான அந்த வரியிடத்தகு காலப்பகுதியின் முடிவிலிருந்து அல்லது பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாகப் பெறப்பட்டும் இருக்குமாயின்,

(iv) விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய வரிப்பணப்பட்டியலின் மீதான அல்லது சுங்கப் பண்டங்கள் வெளிப்படுத்துகை மீதான உள்ளீட்டு வரி, அத்தகைய வரிப்பணப் பட்டியல், அல்லது சுங்கப் பண்டங்கள் வெளிப்படுத்துகை பெறப்பட்ட வரி விதிக்கப் படற்பாலதான காலப் பகுதிக்கு வெளியீட்டு வரியிலிருந்து கழிக்கப்படவில்லையாயின் : " ;

(ஆ) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்பு வாசகத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும் : —

"ஆயின் மேலும், (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பில் அனுமதி மறுக்கப்பட்ட உள்ளீட்டு வரி, அத்தகைய வாகனம் ஏதேனும் வரிவிதிக்கற்பாலதான செயற்பாட்டில் பகுதியளவில் அல்லது முழுமையாகப் பயன்படுத்தப்பட்டவிடத்து, (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, 2003 சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதிக்கு அத்தகைய உள்ளீட்டு வரியின் ஐம்பது வீத எல்லை வரை அனுமதிக்கப்படலாம். " ;

(5) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "(5) ஆம் உட்பிரிவின்" என்னும் எண்ணுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "(6) ஆம் உட்பிரிவின்" என்னும் எண்ணையும் சொற்களையும் இடுவதன் மூலமும் ;

(6) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "ஆறாம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏழாம் உட்பிரிவின் அல்லது 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவின்" என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் IIIஅ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

8. பின்வரும் புதிய அத்தியாயம் III ஆம் அத்தியாயத்தை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் IIIஅ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அத்தியாயம் IIIஅ

குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால் நிதிச் சேவைகள் வழங்கப்படுவதன் மீது சேர்பெறுமதி வரியை விதித்தல்

சேர்பெறுமதி வரியை குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால் நிதிச் சேவைகள் வழங்கப்படுவதன் மீது விதித்தல்.

25அ. (1) இச்சட்டத்துக்கான அத்தியாயங்கள் I, II, III என்பவற்றின் ஏற்பாடுகள் மற்றும் முதலாம் அட்டவணையிலுள்ள (xi) என்னும் விடயம் என்பன எவ்வாறிருப்பினும், (இதனகத்துப்பின்னர் இந்த அத்தியாயத்தில் "வரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சேர்பெறுமதி வரியொன்று, நிதிச் சேவைகளை வழங்கும் தொழிலொன்றைக் கொண்டுநடாத்துகின்ற ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தினால் செய்யப்பட்ட இலங்கையில் அத்தகைய நிதிசார் சேவை

களின் வழங்கல்மீது 2003 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, அறவிடப்படுதல் வேண்டும்.

(2) இலங்கையில் ஏதேனும் நிதிச் சேவையை வழங்கும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும், விடயத்துக்கேற்றாற்போல மூன்று மாதங்கள் கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கான அத்தகைய வழங்கலின் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை அல்லது பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கான அத்தகைய வழங்கலின் பெறுமதி பதினெட்டு இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, பதிவுசெய்யப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட வேண்டும்.

(3) இரண்டாமுட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து பத்து நாட்களுக்குப் பிந்தாமல் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவு செய்வதற்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் இந்த அத்தியாயத்தின் பொருளுக்குட்பட குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றாக இருப்பதுமான ஏதேனும் நிறுவனம் எல்லா நோக்கங்களுக்காகவும் இந்த அத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய பதிவின்மேல் இவ்வத்தியாயத்தின்கீழ் அத்தகைய பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்துக்கு,

(அ) வரிப் பதிவு இலக்கமொன்றையும் ; அத்துடன்

(ஆ) பதிவுச் சான்றிதழ் ஒன்றையும்

வழங்க வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இந்த அத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் நிறுவனம் இந்த அத்தியாயத்தின்கீழ் வரிப்பதிவு இலக்கமும் பதிவுச் சான்றிதழும் வழங்கப்பட்டதாதல் ஆகாது.

மாதாந்த வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி.

25ஆ. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தினதும் வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி ஒரு மாதமாதல் வேண்டும்; அத்துடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான விவரத்திரட்டொன்று அடுத்து வரும் மாதம் முடிவடையு முன்னதாக ஒவ்வொரு மாதத்துக்காகவும் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

வரியைக் கணக்கிடுதல்.

25இ. (1) இந்த அத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பொருளாதாரத்தின் நலனைக் கருத்துட்கொண்டு, அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் பொருளாதாரத் தேய்வுக்கும் அத்தகைய நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவருக்கும் கொடுபடற்பாலதான வேதனாதிகளுக்குமான சீராக்கத்துக்கு அமைவாக, ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கக் கணிக்கப்பட்ட அத்தகைய இலாபத்தின் மீது வருமானவரி செலுத்துமுன்னர், விடயத்துக்கேற்றாற்போல, தேறிய இலாபங்களை அல்லது நட்டத்தை உள்ளடக்கும் அத்தகைய நிறுவனத்தின் மொத்தப் பெறுமதிச் சேர்க்கைமீது வரிவிதிக்கப்படற்பாலதான ஒவ்வொரு காலப் பகுதிக்கும் வரிக்குப் பொறுப்புடையதாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், வரிவிதிக்கப்பாலதான காலப்பகுதி ஒவ்வொன்றுக்குமான இலாபங்களின் தொகை செவ்வையாக நிட்சயிக்கப்பட

இவ் விடத்து, அத்தகைய தொகை, கிடைத்துள்ள தகவலின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படலாம். மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகள் அரையாண்டு அடிப்படையில் உள்ளவாறாக தொகையைப் பிரதிப்பதற்கென சீராக்கப்படுதல் வேண்டும்.;

சகல ஊழியர்களுக்கும் செலுத்தப்படும் வேதனாதிகள் —

(அ) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XIV அத்தியாயத்தின் கீழான "குறித்துரைக்கப்பட்ட ஊழியர்" களின் விடயத்தில், அத்தகைய ஊழியர்களுக்குக் கொடுபடற்பாலதும் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாரட்டரசிறைச் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பேணப்படும் சம்பளத்தாளில் காணப்படுவதுமான மொத்த வேதனத்தை உள்ளடக்கும் : அத்துடன்

(ஆ) "குறித்துரைக்கப்பட்ட ஊழியர் தவிர்ந்த வேறு ஊழியர் ஒருவரின் விடயத்தில், (2) ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்படும் சம்பளத் தாளில் காணப்படும் அத்தகைய ஊழியருக்குக் கொடுக்கப்படும் மொத்த வேதனத்தை உள்ளடக்கும்.

(2) பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும், குறித்துரைக்கப்பட்ட ஊழியர் தவிர்ந்த, ஒவ்வோர் ஊழியர் தொடர்பாகவும் 2002 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமை

யதிபதியினால் எடுத்துக்காட்டப்பட்ட முறையில், சம்பளத் தாள் ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மாதத்துக்கும் செலுத்தப்படற்பாலதான வரித்தொகை ஓராமுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிச் சேர்க்கைகளின் பத்து வீதமாதல் வேண்டும்.

வரி வரவு வைத்தல்.

25ஈ. ஏதேனும் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் இந்த அத்தியாயம் தவிர்ந்த இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் ஏதேனும் வரியைச் செலுத்துயுள்ளவிடத்து, இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காகவும் இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களைக் கணிப்பதற்காக அத்தகைய நிறுவனத்தின் வரவுகளை அங்கீகரிப்பதில் முக்கிய வேறுபாடு எதுவும் ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி இல்லாதிருக்குமிடத்து, இந்த அத்தியாயத்தின்கீழ் கொடுபடற்பாலதான வரிக்கெதிராகச் செலுத்தப்பட்ட அத்தகைய வரிக்குச் சமமான ஒரு பணத்தொகைமீதுவரி வரவொன்று அனுமதிக்கப்பட வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் நியமவீதத்தில் 22ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கணிக்கப்பட்ட வரி தொடர்பில், இந்த அத்தியாயத்தின் கீழ்த் தவிர, இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் அத்தகைய வரியின் ஐம்பது நூற்றுவீதம் மாத்திரமே இந்த அத்தியாயத்தின்கீழ் கொடுபடற்பாலதான வரிக்கெதிராகக் கழிக்கப்படுதல் வேண்டும்.

IV முதல் XVI வரையான அத்தியாயங்கள் இந்த அத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்புடையனவாதல்.

25உ. அத்தியாயங்கள் IV முதல் XVI வரையானவற்றின் ஏற்பாடுகள் இந்த அத்தியாயத்தின் கீழ் அறவிடப்படும் வரி தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொருள்கோடல்.

25ஊ. இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக —

"நிதி சார் சேவைகள் வழங்கல்" என்பது, —

(அ) ஏதேனும் நடைமுறை, வைப்பு அல்லது சேமிப்பு கணக்கின் தொழிற்பாடு ;

(ஆ) நாணயமாற்று ;

(இ) ஏதேனும் பணப்பத்திரம், கொடுப்பனவுக் கட்டளை, காசோலை அல்லது வரவுக் கடிதம் என்பவற்றின் வழங்கல், கொடுப்பனவு, சேகரிப்பு அல்லது சொத்தாண்மைக் கைமாற்றல் ;

(ஈ) எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட வேண்டிய பணத்தில் உள்ள ஏதேனும் அக்கறையாக அல்லது பணம் செலுத்தப்படுவதற்கான உரிமையாக இருக்கும், ஏதேனும் கடன் பிணைப் பொறுப்பை வழங்குதல், குறித்தொதுக்குதல், அதன் சொத்தாண்மையைக் கைமாற்றுதல், அதனை வரைதல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது அதிற் புறக்குறிப்பிடுதல் ;

(உ) ஏதேனும் ஒப்புரவுப் பிணைப் பொறுப்பை அல்லது பங்குபற்றும் பிணைப்பொறுப்பை வழங்குதல், குறித்தொதுக்குதல், அல்லது அதன் சொத்தாண்மையைக் கைப்பற்றுதல் ;

(ஶ) ஒப்புரவுப் பிணைப்பொறுப்பின், கடன் பிணைப்பொறுப்பின் அல்லது பங்கு பற்றும் பிணைப்பொறுப்பின் வழங்குகைக்குப் பொறுப்பேற்றல் அல்லது கீழ்ப் பொறுப்பேற்றல் ;

(எ) ஏதேனும் கடன், முற்பணம் அல்லது கொடு கடன் ஏற்பாடு செய்தல் ;

(ஏ) (அ) வாடகைக் கொள்வனவு நிபந்தனை விற்பனையில் அல்லது கடன் விற்பனை உடன்படிக்கையில், தவணைப் பணக் கொடுக்கப்பனவுக் கடன் நிதியளிப்பு வசதிக்குத் தனியான விதிப்பனவு செய்யப்பட்டு, வழங்கல் எந்த ஆளுக்குச் செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு வெளிப்படுத்தப்பட்ட தவணைப்பணக் கொடுப்பனவுக் கடன் நிதியளிப்பு வசதி ;

(ஆ) ஏதேனும் வாடகைக் கொள்வனவு நிபந்தனை விற்பனையின் கீழ் அல்லது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் பண்டங்கள் வழங்குதலும் அத்தகைய உடன்படிக்கைத் தேதியன்றுள்ளவாறாக பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலப் பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்படும் அப்பண்டங்களுக்கும்

ஏற்பாடு செய்தல்,

என்று பொருள்படும்.

"குறித்துரைக்கப்பட்ட நிறுவனம்" என்பது,

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட உரிமமளிக்கப்பட்ட, வர்த்தக வங்கி ஒன்று ;

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பெனி ஒன்று :

(இ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் பொருளுக் குட்பட்ட உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒன்று.

என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "சார்த்தப்பட்ட வழங்கல்கள்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிமதிப்பீடு செய்யப்பட்டுள்ள சார்த்தப்பட்ட வழங்கல்களின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அந்த உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் "தவணை தவறிய" எனும் சொற்களுக்குப் பதிலாக "தவணை தவறியுள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரி வினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது : —

"(3) இப்பிரிவின்கீழ் கொடுபடற்பாலதான ஏதேனும் தண்டப்பணம் 2002 நவெம்பர் 6 ஆந் திகதியன்று வெளி நிலுவையாக இருக்கின்றவிடத்து —

(அ) தவணைதவறுகையாகவுள்ள கொடுபடற்பாலதான வரி 2002 நவெம்பர் 6 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ள விடத்து, அத்தகைய தண்டப்பணம் முழுமையாகச் செலுத்தாது விடப்படுதல் வேண்டும் ;

(ஆ) தவணைதவறுகையிலுள்ள வரியின் ஒரு பகுதி 2002 நவெம்பர் 6 ஆந் திகதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, செலுத்தப்பட்ட தவணை தவறுகையிலுள்ள வரியின் பணத்தொகைக்கு குறிப்பீடு செய்யப்படற்பாலதான அத்தகைய தண்டப்பணம் செலுத்தாது விடப்படுதல் வேண்டும் :";

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "கருதப்படுதல் வேண்டும்" என்பது தொடங்கி அப்பிரிவு முடியவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "எந்நேரத்திலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வரிமதிப்பீடு தொடர்புபடுத்தும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் வரிமதிப்பீட்டு அறிவித்தல் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகளைக் குறிப்பீடுசெய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தில், "மூன்று ஆண்டுகளுக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு ஆண்டுகளுக்குள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :

"(2) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின் கீழான மீளாய்வுச் சபைக்கான மேன்முறை யீடொன்று சபையினால் அத்தகைய மேன் முறையீடு விசாரிக்கப்படத் தொடங்கிய திகதியிலிருந்து இரண்டு வருட காலப் பகுதிக்குள்ளாகச் சபையினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

15. பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"தவணை தவறிய வரியை அறவிடு வதற்கான கால எல்லை.

48அ. ஏதேனும் வரி தவணைதவறிய திகதி யிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் ஐந்து வருட காலப்பகுதி கழிந்துள்ளவிடத்து, அத்தகைய வரியை அறவிடுவதற்காக வழக்கு நடவடிக்கை கள் எவையும் தொடரப்படுதலாகாது அல்லது வரியை அறவிடுவதற்காக முடிவுறாதிருக்கும் வழக்கு எதுவும் இந்த அத்தியாயத்தின் கீழ் மேற்கொண்டு நடாத்தப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின்போது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிவிதிக்கப்படற்பாலதான அத்தகைய காலப்பகுதியின் முடிவிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(அஅ) 25அ என்னும் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப் பட்டவாறு பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கத் தவறுகின்ற; அல்லது" ;

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 75அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும். : — முதன்மைச் சட்டவாக்கத்தில் 75அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"செயலாளர் வழிகாட்டு நெறிகளை வழங்குதல்.

75அ. அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தோதானதென அவர் கருதும் ஏதேனும் கருமம் தொடர்பில், காலத்துக்குக்காலம் வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்.".

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவில் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கஞ்செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(ii) 64 ஆம் பிரிவின் கீழ் ; அத்துடன்".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "பிரதி ஆணையாளர் என்ற சொற்றொடரின் வரைவிலக்கணத்தில் "உண்ணாட்டரசிறைப் பிரதி ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை பிரதி ஆணையாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) "பண்டங்கள்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"பண்டங்கள்" என்பது எல்லா வகைப்பட்ட அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் என்று பொருளாகும். ஆனால் பின்வருவனவற்றை உள்ளடக்காது, :

(அ) பணம் ;

(ஆ) தனித்துவமான நிகழ்ச்சித்திட்டமாக அல்லது நியம நிகழ்ச்சித்திட்டத்துக் கான இசைவாக்கமாக, கம்பெனி இடைத்தகவல் தரவுகள் மற்றும் கணக்குகளாக இப்போதுள்ள குறிப் பான நிகழ்ச்சித்திட்டங்களின் மேம் படுத்தல் மற்றும் நாளதுவரை யாக்கமாக, மூலநிகழ்ச்சித்திட்டத்தை வாங்கிய வாடிக்கையாளர்களுக்கான ஒப்பந்தக் கடப்பாட்டின்கீழ் வழங்கப் பட்ட இப்போதுள்ள வழமையாக் கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக் கான மேம்படுத்தல் மற்றும் நாளது வரையாக்கமாக வாடிக்கையாளர் களின் விசேட தேவைப்பாடுகளுக் கென உருவாக்கப்பட்ட கணனி மென்பொருள் அல்லது மென்கல மொன்றில் உள்ளடக்கங்களின் பெறு மதி தனியாக அடையாளங் காணப் படற்பாலதாக இருக்குமிடத்து, அவ் வுள்ளடக்கங்களின் பெறுமதி.";

(3) "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தின், (அ) என் னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை நீக்கஞ்செய்வ தன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :–

"(IV) எவரேனும் ஆள் தொழிலொன்றைத் தொடங்கியுள்ளபோது அல்லது கருத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளபோது இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் அல்லது 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் தேவைப் பாடுகளுக்கிணங்கியொழுகப் பொறுப்பேற் கின்றவிடத்து".

21. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது : —

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

(1) அந்த அட்டவணையின் (ஏ) என்னும் பந்தியின் (XI) என்னும் விடயத்தை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :

"(XI) (அ) வாடகைக் கொள்வனவு நிபந்தனை விற்பனையில் அல்லது கடன் விற்பனை உடன்படிக்கையில், தவணைப் பணக் கொடுப்பனவுக் கடன் நிதியளிப்பு வசதிக்குத் தனியான விதிப்பனவு செய்யப்பட்டு, வழங்கல் எந்த ஆளுக்குச் செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு வெளிப்படுத்தப்பட்ட தவணைக் கொடுப்பனவுக் கடன்நிதியளிப்பு வசதி ;

(ஆ) ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் அல்லது நிபந்தனை விற்பனை உடன்படிக்கையின்கீழ் அத்தகைய உடன்படிக்கைத் தேதியன்றுள்ளவாறாக பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்படும் பண்டங்களுக்கும்,

ஏற்பாடு செய்தல் ;";

(2) அந்த அட்டவணையின் (XIII) ஆம் விடயத்தில் "பண்டங்களின் இறக்குமதியும் வழங்கலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பண்டங்களின் இறக்குமதியும் வழங்கலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(3) அந்த அட்டவணையின் (XIV) ஆம் விடயத்தில் "பயன்படுத்தப்படாத அஞ்சல் அல்லது இறைவரி முத்திரைகளின் இறக்குமதி அல்லது வழங்கல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இறைவரி முத்திரைகளின் இறக்குமதி அல்லது வழங்கல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

(4) அந்த அட்டவணையில் (XVI) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வருவதனை இடவும் :

"(XVI) அத்தகைய பொருட்கள் வெளிநாட்டிலுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்து அன்பளிப்புகளாகும் என அமைச்சர் திருப்திப்படுமிடத்து அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பினால் அத்தகைய பொருட்களின் இறக்குமதி அல்லது இயற்கையால் அல்லது மனிதனால் ஏற்படுத்தப்படும் சடுதி அனர்த்தங்களுக் கான நிவாரணத்திற்கென ஏதேனும் வெளிநாட்டு ஒழுங்கமைப்பால் நேரடியாக நிதியளிப்பு செய்யப்பட்ட பண்டங்களின் விநியோகம் ;" ;

(5) அந்த அட்டவணையின் (XXVI) என்னும் விடயத்தை நீக்கஞ் செய்வதன் மூலமும்

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்த அட்டவணையின் (IX) ஆம் விடயத்தில் "பருப்பு வகைகள்" என்னும் சொற்களுகளுக்குப் பதிலாக, "பருப்பு" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) அந்த அட்டவணையின் (XII) ஆம் விடயத்தில் "பெற்றோல், டீசல் மற்றும் திரவ பெற்றோலிய வாயுவின் வழங்கல் அல்லது இறக்குமதி என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெற்றோல், டீசல், மற்றும் திரவ பெற்றோலிய வாயுவின் வழங்கல் அல்லது இறக்குமதி" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அவ்வட்டவணையின் (XVIII) என்னும் விடயத்தை நீக்கஞ்செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"(XVIII) குத்தகைக்குக் கொடுக்கப்பட வெள்ள சொத்தின் வகையான அல்லது அத்தகைய குத்தகைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான முற்பணக் கொடுப்பனவொன்றின் அல்லது மொத்த உடன்படிக்கைப் பெறுமதியின் பத்து வீதத்தை விஞ்சுகின்ற, குத்தகை உடன்படிக்கையின் கீழ் கொடுபடற்பாலதான பணத்தொகையின் நேரகாலத்துடனான தீர்வுக்கான ஏதேனும் கொடுப்பனவின் ஏதேனும் பொறுகை தவிர, 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆள் ஒருவரினால் நிதிக் குத்தகை வசதிகள் வழங்கப்படுதல் ;";

(4) அவ்வட்டவணையின் (XXI) என்னும் விடயத்தை நேர்ரே உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :—

(XXII) கருத்தரங்குகளை அல்லது வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதில் இலங்கைச் சமவாயப் பணியகத்துடன் பதிவுசெய்யப்பட்ட உயர்தொழில் மாநாட்டு ஒழுங்கமைப்பாளர்களினால் சேவைகள் வழங்கப்படுதல்;

(XXIII) துணிமணிவகைகள் மற்றும் கைத்தறி உற்பத்திப்பொருட்கள் என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி ;

(XXIV) கப்பல்கள் வழங்கல் அல்லது இறக்குமதி;

(XXV) ஏதேனும் ஆபரணவகை வழங்கல் அல்லது இறக்குமதி ;

(XXVI) சோளம் வழங்கல் அல்லது இறக்குமதி ;

(XXVII) மருத்துவ மற்றும் பல் மருத்துவ உபகரணம், சுகாதாரச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கான பிணியாளர் வண்டிகள், அறுவை மருத்துவ கட்டு துணிவகைகள் உட்பட, எந்திரசாதனம், மருத்துவ மற்றும் அறுவை மருத்துவ சாதனங்கள், கருவிகள் அல்லது துணைப் பொருட்கள் என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி ;

(XXVIII) முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வழங்கல்களைத் தவிர, வதிவிடத்தின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை ;

(XXIX) முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வழங்கல்களைத் தவிர, மருத்துவ நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் எல்லா சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளினதும் வழங்கல் ;

(XXX) காணிகளதும் திருத்தங்களதும் வழங்கல்.".

முன்நிகழ் காலத்தைக் கொள்ளும் பயன்.

23. (1) இச்சட்டத்தின் இரண்டாம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம், IIIஅ என்னும் புதிய அத்தியாயம் ஒன்றை உட்புகுத்துதல், 33 ஆம், 34 ஆம், 35 ஆம் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், அத்துடன் 48அ என்னும் பிரிவை உட்புகுத்துதல், 58 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம், பிரிவு 75அ என்னும் பிரிவை உட்புகுத்துதல், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணைக்கு பிரிவுகள் 2, 8, 12, 13, 14, 15, 16, 17, 22 (3) அத்துடன் 22 (4) என்பவற்றால் செய்யப்பட்ட திருத்தம் என்பன எல்லா நோக்கங்களுக்காகவும் 2003 சனவரி 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்:

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 11, 14, 20, 21, 22, 26, 28, 80, 83 என்பவற்றிற்கும் முதலாம் அட்டவணை, இரண்டாம் அட்டவணை என்பவற்றிற்கும், இச்சட்டத்தின் பிரிவுகள் 3, 4, 5, 6, 7, 9, 11, 19, 19 (1), 21, 22(1), 22(2) என்பவற்றால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 ஓகத்து 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 நவெம்பர் 6 ஆம் திகதி வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

24. இச்சட்டத்தில் எற்பாடு செய்யப்பட்டவாறு 2003 சனவரி 1 ஆம் திகதியன்று தொடக்கம் இச்சட்டம் தொடங்கும் திகதி வரையிலான காலப்பகுதியின்போது, வரியைச் சேகரிக்கின்ற ஆளெவரும், முறையான அதிகாரத்துடன் செயற்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியாகும் விதத்தில் செய்யப்பட்டுள்ளதாகவும் இருப்பதாகவும் கருதப்படுதலும் வேண்டும், அத்துடன் அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராக இத்தால் நட்டோத்திரவாதம் செய்யவும் படுகின்றார். செல்லுபடியாதல்.

25. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387; (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.